PUBLIC LIBRARY
JAFFNA
NALLUR BRANCH LIBRARY

# அரசியல் தீர்வுக்கு அரசு ஆலோசனை?

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 19 இதழ் 290
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 4-12-1993

## அரச அதிபர் பேட்டி

(கொழும்பு)
பூநகரி மோதலின்பின் இராணுவ நடவடிக்கைகளைக் கைவிட்டு அரசியல் தீர்வு ஒன்றின்மூலம் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் தற்போது ஆலோசிப்பதுபோன்ற அறிகுறிகள் தென்படுவதாக யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் பி. பி. ஸி. க்கு அளித்த பேட்டியில் நேற்று குறிப்பிட்டார்.

கொழும்பில் தற்போது தங்கியிருக்கும் யாழ் அரச அதிபர் தமது பேட்டியில் மேலும் குறிப்பிடுகையில் கூறியதாவது.

(2ம் பக்கம் பார்க்க)

## அரச அதிபர் பிரதமர் கொழும்பில் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)
கொழும்பில் தங்கியிருக்கும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் யாழ். செயலகம் மீதான குண்டுத் தாக்குதல் குறித்தும் யாழ் மாவட்ட மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் குறித்தும் நீண்ட நேரம் பேச்சுவார்த்தை நடத்தியதாகத் தெரியவருகிறது.

யாழ். செயலகம் மீதான குண்டுவீச்சு தாக்குதலினால் செயலக ஊழியர்கள், பொது மக்கள் பலரும் காயமடைந்த

(4-ம் பக்கம் பார்க்க)

# யாழ் - கிளிநொச்சி - முல்லையை

# இன்று கடும் சூறாவழி தாக்கும்?

## வானிலை அவதான நிலையம் எச்சரிக்கை

(கொழும்பு)
யாழ் குடாநாடு, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளை இன்று கடும் சூறாவளி தாக்கலாம் என கொழும்பு வானிலை அவதான நிலையம் நேற்று எச்சரிக்கை விடுத்துள்ளது. வங்கக் கடலில் நிலைகொண்டுள்ள சூறாவளி இன்று இந்தப் பகுதிகளின் ஊடா தமிழ்நாட்டை சென்று தாக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்கக் கடலில் நிலைகொண்டிருந்த சூறாவளி நேற்று திடீரென தீவிரமடைந்தது. நேற்று மாலை ஆறு மணியளவில் முல்லைத்தீவுக்கு கிழக்கே சுமார் 250 கிலோ மீற்றர் தொலைவில் அது நிலை கொண்டிருந்தது.

இன்று காலை இந்த சூறாவளி யாழ். குடாநாட்டின் வழியாக தமிழ் நாட்டை நோக்கி நகரும் என தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் குடாநாடு, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் இடியுடன் கூடிய மழைபெய்யும்.

வடகிழக்கு வடமத்திய பகுதிகளிலும் இடியுடன் கூடிய மழை பெய்யும்.

(4ம் பக்கம் பார்க்க)

## தமிழகத்திலும் இன்று சூறாவளி அபாயம்!

(சென்னை)
சூறாவளி எச்சரிக்கையை அடுத்து சென்னையிலும் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சூறாவளி 100 முதல் 120 கிலோமீற்றர் வேகத்தில் வீசக் கூடும். இதனால் பெரிய மரங்

(4-ம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றுக்குள் எவரும் ஆயுதங்களுடன் வரமுடியாது

### - சபாநாயகர் அறிவிப்பு

(கொழும்பு)
ஆயுதங்களுடன் எவரும் நாடாளுமன்றத்துக்குள் பிரவேசிக்க முடியாது என சபாநாயகர் அலஹப்பெரும் எம். எச். முஹம்மது தெரிவித்துள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் சபாநாயகர் இதனை அறிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது.

பொலிஸார் ஆயுதங்களுடன் நாடாளுமன்றத்தில் இருப்பதை நான் கண்டிருக்கிறேன். நாடாளுமன்றம் பொது மக்களின் அதி உன்னத மதிப்பைப்பெற்ற ஓர் இடமாகும். இது ஒரு அரசியல் அலுவலகமோ அல்லது ஒரு கட்சி அலு

(4-ம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் காவல்நிலையம் மீது முஸ்லிம் கும்பல் தாக்கு

### கொழும்பு மத்திய பகுதியில் சம்பவம்

(கொழும்பு)
கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் நேற்று முஸ்லிம் கோஷ்டி ஒன்று பொலிஸ் நிலையம் மீது தாக்குதலை மேற்கொண்டது. இதனையடுத்து புறக்கோட்டை, வாழைத்தோட்டம் பகுதிகளில் நேற்று பெரும் பதற்றம் நிலவியது.

நேற்றுப்பகல் சமயச்சடங்குகளில் ஈடுபட்ட பின்னரேயே வந்த முஸ்லிம் கோஷ்டி ஒன்று வாழைத்தோட்டத்திலுள்ள பொலிஸ் காவல் நிலையம் மீது கற்களைக்கொண்டு தாக்கினர். இந்தச் சம்பவத்தில் சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் இருவரும் பொது மக்கள் சிலரும் காயமடைந்தனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## பலாலி முகாமிலிருந்து விடுதலையானோர் விபரம்

(யாழ்ப்பாணம்)
பலாலி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களில் விடுதலை செய்யப்பட்டவர்கள் இன்று யாழ்ப்பாணம் வந்து சேர்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் காலநிலை சீராக இல்லாததனாலும் கடல் கொந்தளிப்பு மிகுதியாக இருப்பதனாலும் இவர்களை காங்கேசன்துறையூடாக பருத்தித்துறைக்கு அன்று அழைத்து வருவது கடினமாகவே இருக்குமென சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரி தெரிவித்தார்.

விடுதலை செய்யப்பட்டவர்

(4ம் பக்கம் பார்க்க)

## திருமலை தாக்குதலில் பெருமளவு ஆயுதம் மீட்பு

(திருமலை)
திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் பகுதியில் உள்ள பூநகர் என்றவிடத்தில் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் இராணுவத்தினர்மீது மேற்கொண்ட திடீர் தாக்குதலில் விடுதலைப்புலிகள் பெருமளவு இராணுவ தளபாடங்களை கைப்பற்றியுள்ளனர். அதன் விபரங்கள் வருமாறு:

ஏ. கே. இலகு இயந்திரத் துப்பாக்கி - 01, அதற்குரிய

(2ம் பக்கம் பார்க்க)

## ராணுவம் தாக்கி முல்லையில் ஒருவர் பலி இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)
முல்லை மாவட்டத்தின் நெடுங்கேணியிலுள்ள குளம் சந்தியில் வைத்து வயல் வேலை செய்து விட்டு திரும்பிக் கொண்டிருந்த ஐந்து பொது மக்கள் மீது ராணுவம் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தியது.

ராணுவத்தின் தாக்குதலினால் ஒருவர் கொல்லப்பட்டதோடு இருவர் காயமடைந்தனர். ஏனைய இருவரும் காயமின்றி தப்பியோடி வந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் கொல்லப்

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ். செயலகத்தை திருத்தி புனரமைக்க அரசு அனுமதி

(யாழ்ப்பாணம்)
கடந்தமாதம் சுப்பர்சொனிக் விமான குண்டுவீச்சினால் சேதமடைந்த யாழ் மாவட்ட அரச செயலகத்தை திருத்தி புனரமைப்பதற்கு அரசு அனுமதியளித்துள்ளது. இத்தகவலை கொழும்பில் தங்கியிருக்கும் யாழ் மாவட்ட அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் யாழ் அரச செயலகத்திற்கு நேற்று அனுப்பி வைத்துள்ளார்.

செயலக திருத்த வேலைகளுக்கு தேவைப்படும் சீமெந்து அஸ்பெஸ்ரஸ், கண்ணாடி போன்ற பொருட்கள் விரைவில் யாழ்ப்பாணத்திற்கு கப்பல் மூலம் கொழும்பிலிருந்து எடுத்து வரப்படவுள்ளதாக

(4-ம் பக்கம் பார்க்க)

## மழையினால் யாழ். மாவட்டத்தில் 8600 குடும்பங்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ் மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் மழையினால் பெருமளவு மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். கடந்த முதலாம் திகதி கணக்கிடப்பட்ட கணிப்பீட்டின்படி எண்ணாயிரத்து அறுநூறு குடும்பங்கள் யாழ். மாவட்டத்திலுள்ள 7 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாக கணக்கீட்டு புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இதன் அடிப்படையில் யாழ்ப்பாண உதவி அ. அ. பிரிவு

(4ம் பக்கம் பார்க்க)

## விளம்பரம்

### விற்பனைக்கு

முதிரையிலான கண்ணாடி அலுமாரி, தேக்கம் பலகையிலான கபேட், காரியாலய (Office) மேசை, சோக்கேஸ், கட்டில்கள், இன்னும் பல வீட்டுத் தளபாடச் சாமான்கள் விற்பனைக்குண்டு. இல. 4 மவுண் கார்மேல் வீதி, யாழ்ப்பாணம், (அடுத்து பேராதைய பெரியதபால் கந்தோர் முன்பாக). (சி-632)

### அறிவுக்களஞ்சியம்

"அறிவுக்களஞ்சியம்" அறிவியல் ஏட்டை மாணவர்கள் மட்டுமன்றி பெரியவர்களும் அறிஞர்களும்கூட வாசிக்கிறார்கள், பாராட்டுகிறார்கள். 18-வது இதழ் இப்போது விற்பனையாகிறது! ரூபா 12/-. (ஏ-3632)

### வியாபாரிகளுக்கு

தரமான இமிரேசன் கோல்ட் கவறிங் நகைகள் மணப்பெண்களின் சோடனை நகைகள், லேஸ், நூல் வகைகள் சிறுவர் விளையாட்டுப் பொருட்கள் மற்றும் வெளிநாட்டு, உள்நாட்டு அழகுசாதனப் பொருட்களை நிதான விலையில் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். ஜெயா அழகு சாதன மாளிகை, 177A, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (எ- 3622)

### தவறிவிட்டது

ஜேசலின் சாமிநாதன், ஜேஸ் புனித சீலி வசாவிளான் கிழக்கு என்பவருடைய இல. 337020976 V 627010686 V அடையாள அட்டைகள் 20-11-93 அன்று இன்னக்கடை சந்தையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல 82, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். (சி 633)


### திருமலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரம்ப ரவைக்கூடுகள் - 04, ரவைத் தொடர்கள் - 495, டீ 56 ரக துப்பாக்கிகள் - 05, டீ 86 ரக துப்பாக்கிகள் - 01, ஏ. கே. ரவைக்கூடுகள் - 14, நடுத்தர ரவைகள் - 1044, ஏ. கே. ரவைக்கூடு தாங்கிகள் - 05, ஜே. ஆர். கைக்குண்டுகள் - 04 மழைக்கவசங்கள் - 06, சப்பாத்துசோடி-01 இடுப்புப்பட்டி - 02, பைகள் 02, ஆகியவற்றை கைப்பற்றினர். (வி-)

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மிரேவுன் ரோட் டறக் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டத் தொடரில் இன்று மாலை 3-00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டி விபரம் வருமாறு:

பாடுமீன் எதிர் சென். நீக்கிலஸ் வி. க. சென் அன்ரனீஸ் எதிர் சென். மேரீஸ் வி. க. (சி)

0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். ப. நோ. கூ. ச. விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்படும் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையிலான மாவீரர் வெற்றிக் கேடயத்திற்கான உதைபந்தாட்ட அரையிறுதி சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

முதல் போட்டியில் கன்னுகம் எதிர் நெல்லியடியும் 2வது போட்டியில் யாழ்ப்பாணம் எதிர் உடுப்பிட்டியும் மோதுகின்றன.

### அரசியல் தீர்வு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் நகர்மீது சுப்பிரசொனிக் விமானங்கள் அண்மையில் நடத்திய கண்மூடித்தனமான குண்டுவீச்சின் கொடூரங்களையும் அதன் அழிவுகளையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் விபரமாய் எடுத்துக் கூறியதுடன் இக்குண்டு வீச்சினால் எனக்கு ஏற்பட்ட காயத்தையும் அவருக்கு காட்டி வேன். இதனால் மக்கள் படும் பெரும் கஷ்டங்களையும் அவருக்கு எடுத்துக் கூறியுள்ளேன்.

பிரதமருடன் நான் மேலும் கூறுகையில், இப்பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வைக் காணும்படியும் இராணுவத் தீர்வு ஒருபோதும் சாத்தியப்படாது என்பதற்கு பல ஆதாரங்களை காட்டியதுடன் சில விபரங்களையும் கொடுத்துவேன்.

பூநகரி சம்பவத்தின்பின்னர் அரசாங்கமும் சற்று யோசிப்பதுபோன்று தெரிகின்றது. ஆனால் அது எப்படி இருக்கும் என்பது எனக்குத் தெரியவில்லை. (வி-)


### நினைவு நாள் நிகழ்ச்சி

(தாவடி)

கூட்டுறவு இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரான பெரியார் வீரசிங்கம் நினைவு நாள் நாளை 5ம் திகதி காலை பத்து மணிக்கு யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபை மண்டபத்தில் கொண்டாடப்படவிருக்கிறது. (163)

நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகளுக்கு

## வரவேற்பு விழா

இடம்: இளங் கலைஞர் கலா மண்டபம்

காலம்: 5-12-93 ஞாயிறு பி.ப. 5 மணி

தலைவர்:

பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள்

(ஆலோசகர் நல்லை ஆதீன பராமரிப்பு நிதியம்)

முதன்மை விருந்தினர்

சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை

தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

பிற்பகல் 4 மணிக்கு சமுத்துப் பிரபல நாதஸ்வர வித்துவான்களின் இன்னிசையுடன் சுவாமிகள் நல்லை ஆதீனத்திலிருந்து - கோயில் வீதி சட்டநாதர் வீதி வழியாக இளங்கலைஞர் மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார் அவ்வமயம் வீதியெங்கும் பூரண கும்பம் வைத்துச் சுவாமிகளுடைய அருளாசிகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்பர்களை வேண்டுகின்றோம்.

### நிகழ்ச்சி நிரல்

★ மங்கள இசை
★ மங்கல விளக்கு ஏற்றல்
★ இறை வணக்கம்
★ அமைதி வணக்கம்
★ வரவேற்புரை:

கவிஞர் சோ. பத்மநாதன் அவர்கள்

(இணைச்செயலாளர், நல்லை ஆதீன பராமரிப்பு நிதியம்)

★ ஆசியுரை:

பிரம்மஸ்ரீ மகாதேவக்குருக்கள் அவர்கள்

★ தலைமையுரை
★ முதன்மை விருந்தினர் உரை
★ ஆதீன வைப்பு நிதியம் கையளிப்பு

கையேற்பவர்: சிவத்தமிழ்ச்செல்வி அவர்கள்

★ சிறப்புரைகள்:

அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்கள்

திரு. ஆர் வெங்கட்ராமன் அவர்கள் (முகாமையாளர், கொமேஷல் வங்கி)

திரு. சி. வேலாயுதம் அவர்கள் (யாழ். கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர்)

திரு. த. சிவகுமாரன் அவர்கள் (அதிபர் யாழ். இந்துக்கல்லூரி)

திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள்

கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள் (பொறுப்பாளர், தமிழீழ கலை பண்பாட்டுக் கழகம்)

★ நன்றியுரை

கலை நிகழ்ச்சி

"வில்லிசை"

கலாவினோதன் கணபதிப்பிள்ளை குழுவினர்

குறிப்பு: ஆதீன வைப்பு நிதியத்திற்கு நன்கொடையளிக்க விரும்புபவர்கள் யாழ். வர்த்தக வங்கி சேமிப்புக் கணக்கு இல: 25826என்ற இலக்கத்தில் பணம் செலுத்தலாம்.

ஊர்வலத்திலும் விழாவிலும் பெருந்திரளாக கலந்துகொள்ளும் வண்ணம் சைவாபிமானிகளை அன்புடன் வேண்டுகிறோம்.

★ ஒலி: நித்திசவுண்ட், யாழ்ப்பாணம்
★ ஒளி: மனோ லைட், கோப்பாய்

பொ. பாலசிங்கம், சோ. பத்மநாதன்

இணைச்செயலாளர்கள்

நல்லூர்.

விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

அன்பளிப்பு:

சு. சண்முகம்

(தேனீர்க் கடை உரிமையாளர்)

இல. 10, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

(ஏ-3639)


## இராசிபலன்

04-12-1993

சனிக்கிழமை

(தமிழுக்கு கார்த்திகை 19)

பஞ்சமி மு. ப 11-37வரை, பூசம் மு. ப 9-02 வரை. இராகுகாலம் காலை 9-15 முதல் 10 45 வரை, சுப நேரம் மாலை 3-15 முதல் 4-45 வரை.

மேஷம்: அசாத்தியமான எண்ணங்கள், ஆசாரக் குறைவு, கவலை.

இடபம்: காரியசித்தி, தொழில்லாபம், புதிய சிந்தனை.

மிதுனம்: சபல குணம், மனைவிபற்றிய கவலை, அலைச்சல்.

கடகம்: பெரியோர் சந்திப்பு, முக்கிய பிரச்சினை, மனக்களிப்பு.

சிம்மம்: முயற்சி தடை, பணக் கஷ்டம், நண்பர் விரோதம்.

கன்னி: கிரமங்கள் குறைவு, குடும்பச்செலவு, தொழில் மாற்றம்.

துலாம்: தெளிவான யோசனை, சாலகுணம், பண வரவு.

விருச்சிகம்: அவசியமற்ற பயணம், மனவேதனை, பயபீதி.

தனுசு: விரோதிகள் தொல்லை, வீண் விவாதம், பகை கோபம்.

மகரம்: காரியசித்தி, எதிர்பாராதகௌரவம், உற்சாகம்.

கும்பம்: தந்திரப் பேச்சு, உறவினர் அனுகூலம், தெய்வ தரிசனம்.

மீனம்: வைத்தியரைச் சந்திக்கும் நிலை, சமூக மதிப்பு யோசனை.

—ஜோஸ்யர்.

## இன்று

(உடுவில்)

ஐந்தாம் ஆண்டு தமிழ், கணிதம், ஆங்கிலம், சுற்றாடல் ஆகிய பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விசேட கூட்டமொன்று உடுவில் இராமநாதன் கல்லூரியில் இன்று நாலாம் திகதி சனிக்கிழமை நடைபெறும். (109)


# கேள்வி கோரல்


## சுகாதாரத் திணைக்களம்

### யாழ்ப்பாணம்

எமது திணைக்களத்தினால், பின்வரும் மோட்டார் வாகன உதிரிப் பாகங்களிற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. இக்கேள்விப் பத்திரங்களைத் தாங்களாகவே தயாரித்து 10-12-93ம் திகதிக்கு முன்னதாகக் கிடைக்கத்தக்கதாக, சீலிடப்பட்ட கடித உறையில் வைத்து இப்பணிமனையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கோரப்படும் பொருட்கள் 20-12-93ம் திகதிக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். கேள்வி கோரப்படும் பொருட்கள் அல்லது சேவைகளின் முழுவதற்குமோ அல்லது அதன் ஒரு பகுதிக்கோ விண்ணப்பிக்கலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வாகன உதிரிப் பாகங்களிற்கான கேள்விப் பத்திரம்" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

1. பற்றறி (Battery) 12V 90 Amp. — 05
2. ரயர், ரியூப் அளவு — 205 X 16 — 12
   50 X 7 X 18 — 04
   600 X 14 — 09
3. பியுவல் பில்ற்றர் (Fuel Filter)
   Model No. 1. MB 820900 (Pajero Ambulance) —03
   2. PFC 158, OEM 23308 — 64010 (Toyato Ambulance) —04
   3. 04034—5601 (Toyato Lorry) —02
4. ஒயில் பில்ற்றர் (Oil filter)
   1. MB 06782 (Pajero Jeep) —02
   2, 04152-46011 (Toyato Lorry) —02
   3. PFC 101, OEM 15600 - 41010 (Toyato Ambulance) —04
5. பிறேக் லைனிங் செற் — பஜரோ, மொடல், டொயாட்டோ அம்புலன்ஸ், லான்ட்ரோவர்
6. ஷக்கிள் புஷ் (Shackle Bush) பஜரோ அம்புலன்ஸ்
7. ஷொக் அப்சோபர் (Shock Absorber — (லான்ட் ரோவர்) (Land Rover)
8. வாகனங்களிற்குப் பாதுகாப்பிற்காக முன்னும் பொருத்தப்படும் இரும்புப் பிடிகள் மூன்று (3) — பஜரோ அம்புலன்ஸ் ஆனவை
9. வாகன மேற்தளத்தில் "சிலுவை" அடையாளம் இடுதல் (சிவப்பு ஸ்பிறே பெயின்ட்) வாகனம் (அளவு 12'' — 50'')

மாதிரி வடிவம்:




10. செஞ்சிலுவைக் கொடி மற்றும் கொடி பொருத்தும் கம்பம் ஆகியன விநியோகித்து இணைத்தல். தெற்கைந் செற் — டொயாட்டா அம்புலன்ஸ்

டாக்டர் பொ: இரத்தினசபாபதி

பிராந்தியப் பணிப்பாளர்.

விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம். (எ 3638)

### மணிவாக்கு

"நாம் எதிர்பாராத இடங்களிலிருந்தான் மிகப் பெரிய கிரமங்கள் தோன்றுகின்றன"

- ஜோன்ஸ் ருவட்

## நமது நோக்கு

### பரீட்சைக் காலம்

எதிர்வரும் ஆறும் திகதி தொடக்கம் இலங்கை முழுவதும் க. பொ. த. (சா/த) பரீட்சை ஆரம்பமாகப் போகின்றது.

இப்பரீட்சை மாணவர்கள் அனைவருக்குமே பிரதானமாகும். இதன் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே க. பொ. த. (உ/த) வகுப்புகளுக்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

அது மாத்திரமல்ல, ஏனைய உயர் கல்வி வாய்ப்புகளுக்கும், பல அரச, தனியார் பணிகளுக்கும் அடிப்படைத் தகுதியாக இப்பரீட்சை முடிவுகள் அமைகின்றன.

எனவே, மாணவர்களின் எதிர்காலக் கனவுகளைத் தீர்மானிக்கப் போவது இப்பரீட்சை. தமது பிள்ளைகள் திறமைச் சித்திகள் பெற்றிட வேண்டும் எனப் பெற்றோர் ஆவல்படுவதிலும் நியாயம் இருக்கின்றது.

ஆனால், எமது பகுதியில் மாணவர்களால் நிம்மதியாகப் படிக்க முடிந்ததா? பாடசாலைகளில் போதிய ஆசிரியர்களும், தளபாட உபகரண வசதிகளும் இருந்ததா? வீட்டிலே, இரவிலே படிப்பதற்கான வெளிச்ச வசதி இருந்ததா?

குறிப்பாக, இடம் பெயர்ந்த மாணவர்கள் எத்தனை இன்னல்களின் பின்னணியோடு, மனவேதனைகளோடு இந்தப் பரீட்சைக்கு ஆயத்தங்கள் செய்தார்கள்?

இப்படிப் பல துன்பங்களின் மத்தியிலும், ஏதோ பாடங்களைப் படித்து, பரீட்சை விரைந்தால் வந்துவிட்டதா? அதிகாரி போக எப்பலில் வசதி கிடைத்துவிட்டதா? என்ற கேள்விக் குறிகளோடு, ஆவலோடு காத்திருந்து, பரீட்சை மண்டபத்தில் விடை எழுதக்கூடிய சூழ்நிலை உருவாகுமா?

பகலில் வந்துபோகும் ஆகாய அரக்க வானூர்திகள், இரவிலும் சத்தம் எழுப்பி அமைதியைக் கெடுக்கின்றன.

பரீட்சைக் காலத்தில் விமானங்கள் எழுப்பிய, பரீட்சையைக் குழப்பிய சம்பவங்கள் ஏற்கனவே நடந்துள்ளன. பரீட்சை மண்டபங்கள் திடீரென மாற்றும் சூழ்நிலைகள் உருவாகியிருந்தன.

இவற்றைப் பார்க்கும் போது, மாணவர்களின் கல்வியை, பரீட்சைகளை இராணுவம் வேண்டுமென்றே திட்டமிட்டே குழப்புகின்றது என்ற சந்தேகம் பொதுமக்களிடம் ஏற்படுவது நியாயமானதே!

பரீட்சை நாட்களில் குண்டு வீச்சை நிறுத்தும்படி கோரிக்கை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

மாணவர்களின் நலன் கருதி, எதிர் விளைவுகளை மனதில் எண்ணி, அரசு உடன் ஆவன செய்ய வேண்டும்.

மாணவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்!


★ அமரர் து. சீனிவாசகம் அவர்கள்

# சமூகத்திற்கும் நாட்டிற்கும் ஆற்றிய சேவை அளப்பரியது

**எஸ். எம். கோபாலரத்தினம்**

கல்லூரியில் நல்லாசான், கூட்டுறவு இயக்கம் யாழ்ப்பாணத்தில் உதயமாகி வளர்ந்ததற்கு உழைத்த முன்னோடிகளில் ஒருவர் அமரர் து. சீனிவாசகம் அவர்கள். வடமாகாண ஆசிரியர் சங்கம் உருவாவதில் முக்கிய பங்கு வகித்தவர். வடமாகாண ஆசிரியர் சங்கம் எட்டாம் வகுப்பு (ஜே. எஸ். ஸி.) பரீட்சை நடத்தி தராதரப்பத்திரம் வழங்குவதற்கு வழிவகுத்தவர்களில் ஒருவர். யாழ்ப்பாணத்தில் தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்தில் துணிந்து முன்னின்றவர்களில் ஒருவர்.

('ஈழநாடு' முன்னாள் இயக்குனரும், பொது முகாமையாளருமான அமரர் து. சீனிவாசகம் அவர்களின் முதலாவது நினைவுதினத்தைஒட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது.)



யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக ஆலயப் பிரவேசத்துக்கு வழிகாட்டியவர்களில் முன்னின்றவர்களில் ஒருவர். அந்திய காலத்தில் யாரையும் எதிர்பார்த்திருக்காது நிதி சேர்ப்பதற்கு வழிவகுத்த அந்தியகாலச்சங்கம் ஒன்றை நிறுவுவதற்கு முன்னின்றவர். குடியிருப்புப் பிரச்னைக்கு கூட்டுமுயற்சியாக நாவற்குழி, கைதடி வீடமைப்புத் திட்டங்களுக்கு முன்னோடியாக நின்றவர்களில் ஒருவர். தமது சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கட்டுப்பாடாகவும் ஒற்றுமையாகவும் முன்னேறுவதற்கு ஆதீனம் மகாசபை கண்டவர். சென்னையில் சங்கீத சபாக்கள் இருப்பது போன்று யாழ்ப்பாணத்திலும் ரசிக ரஞ்சனசபா உருவானபோது அதன் தலைமைப் பொறுப்பை ஏற்று செயற்பட்டவர்.

ஆலய நிர்வாகம் தூய்மையாக நடைபெறுவதற்கு வண்ணை ஸ்ரீவெங்கடேச வரதராஜப் பெருமான் கோவில் அறங்காவலர் சபைத் தலைவராகவும் அறங்காவலராகவும் பணியாற்றி வழிகாட்டினவர்.

யாழ்ப்பாணத்தில்ஸ்ரீஇராமகிருஷ்ண மடத்தின் நிர்வாகத்தில் இயங்கி வந்த வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயம் கல்வியில் மட்டுமல்ல கலைகளிலும் கட்டுப்பாடு. ஒழுக்கத்திலும் பெயர்பெற்று விளங்கியது. ஆண்களும், பெண்களும் கலந்து கல்வி கற்கும் இக்கல்லூரியில் முஸ்லிம் பெண்களும் கூட அச்சமின்றிப் பெருமளவில் கல்வி கற்று பலராலும் பாராட்டப் பெற்ற திரு. ச. அம்பிகைபாகன், திரு. கா. வைரமுத்து. திரு. து. சீனிவாசகம் ஆகியவர்களே காரணகர்த்தாக்களாக விளங்கினர். அம்பிகைபாகனும், வைரமுத்துவும் சில வருடங்களுக்கு முன்னர் அமரத்துவம் எய்தினர். இப்பொழுது சீனிவாசகம் அவர்களும் அமரராகிவிட்டார்.

இரண்டாவது உலக மகாயுத்த காலத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் எல்லோருக்கும் கிடைக்க முடியாத நிலை ஏற்பட்டபோது கூட்டுறவு இயக்கம் ஆரம்பமானது. கூட்டுறவு இயக்கத்தை யாழ்ப்பாணத்திலும் ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக விளங்கியவர்களில் வட்டுக்கோட்டை வீரசிங்கம் போன்றோருடன் சேர்ந்து சீனிவாசகம் அவர்களும் உழைத்தார்.

யாழ்பாடி கூட்டுறவுச் சங்கம் யாழ். பெருமாள் கோவிலடியில் உதயமானதற்கு சீனிவாசகம் அவர்களே மூலகாரணமாக இருந்தவர். கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தின் தலைமையகமாக யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்க சமாஜம் உருவானது. இச்சமாஜத்தின் செயலாளராகவும் சீனிவாசகம் அவர்கள் பல ஆண்டுகள் திறம்படச் செயலாற்றினார்.

இதேசமயம் யாழ்ப்பாணத்திலுள்ள நெசவாளர்கள் பயன்பெறவும், உள்நாட்டில் புடவைக் கைத்தொழில் வளர்ச்சியடையவும் நெசவாளர் சங்கங்கள் தோன்றவும் இவற்றின் தலைமையகமாக நெசவாளர் கூட்டுறவுச் சங்க சமாஜம் உருவாவதற்கும் சீனிவாசகம் அவர்கள் முன்னோடிகளில் ஒருவராகத் திகழ்ந்தார்.

வடமாகாணத்தில் ஆசிரியர்களை ஒன்றுசேர்த்து சங்கம் ஒன்றை அமைப்பதிலும் சீனிவாசகம் முன்னின்று உழைத்தார். அகில இலங்கை ஆசிரியர் சங்க செயற்குழுவிலும் இவர் பணியாற்றியிருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் குடியிருக்க வீடில்லாமல் கஷ்டப்படுவோர் பலர். இவர்கள் தமக்கெனச் சொந்தத்தில் நிலம் வாங்கி வீடுகட்டிக்கொள்ளும் நிலையில்லாதவர்களே அதிகம்.

இவர்களும் தமக்கெனச் சொந்த வீடு கட்டிக்கொள்ளக்கூடியதாக தரிசு நிலங்களை வாங்கிப் பிரித்துக்கொண்டால் என்னஎன்று யோசித்த சிலர் இதற்கென வீடமைப்புச்சங்கம் ஒன்றை நிறுவினர். இவர்களில் சீனிவாசகம் அவர்களும் முக்கியமானவர். இந்தச் சங்கம் நாவற்குழியிலும் கைதடியிலும் நிலங்களை வாங்கி இச்சங்கத்தில் அங்கத்தவர்களாகச் சேர்ந்தவர்களுக்கு மிகக்குறைந்தவிலையில் சமமாகப் பங்கிட்டுக் கொடுத்திருக்கிறது. ஒருவர் இறந்துவிட்டால் அவரது இறுதிச் சடங்குகளைச் செய்வதற்குப் பணமில்லாமல் பல குடும்பங்கள் படும் அவதியை உணர்ந்த சிலருள் சீனிவாசகம் அவர்களும் ஒருவர். இவர்கள்ஒன்று

(4ம் பக்கம் பார்க்க)

"ஈழநாடு" நிறுவனத்தின்
வளர்ச்சியில்
22 ஆண்டுகள் உழைத்த பெரியார்
அமரர் து. சீனிவாசகம்
அவர்களை
★ நினைவு கூருவோம் ★
அன்னாரது நினைவு தினம் நாளையாகும்.
லிங்கம் கூல்பார்
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.
(ஏ-3640)

உரம் இல்லை என்று சொல்லாதே - இயற்கை உரம் உன் காலடியில் மறவாதே.

உ
சிவமயம்
'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'
தமிழ்க் கலாசார
மறுமலர்ச்சியின் தந்தையும்
ஐந்தாம் சமய குரவருமான
நல்லை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
அவர்களின்
குருபூசைத் தினவிழா
05 - 12 - 1993
யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள ஆலயத்தில் காலை 8-00 மணிக்கு விசேடபூசையும். மாலை 2-30 மணி தொடக்கம் கைலாசபதி கலையரங்கில் சொற்பொழிவும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.
மங்கள இசை
தவில்மேதை அமரர் என். ஆர். சின்னராசாவின் புதல்வர்கள்
நூல் வெளியீடு
'இந்து நெறிச் சஞ்சிகை'
சொற்பொழிவு
பண்டிதர் க. சச்சிதானந்தம், எம். ஏ.
விடயம்: 'சமூக உளவியலும் நாவலரின் பிரசார முறையும்'
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழகம் அளிக்கும்
★ வாத்தியவிருந்து
★ கானவிருந்து
★ நடனவிருந்து
அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்
இந்து மன்றம்
யாழ். பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
திருநெல்வேலி.
விளம்பர பங்களிப்பு:
கிருஷ்ணா மல்ரி சொப்
802, பலாலி வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
(ஏ-3637

NALLUR BRANCH LIBRARY JAFFNA

## குண்டு வீச்சை கண்டித்து

# கறுப்புப்பட்டி அணிந்து நகரில் நேற்று மௌன ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

ஆலயங்கள், மக்கள் குடியிருப்புகள் மீது விமானக்குண்டு வீச்சு நடாத்துவதைக் கண்டித்து திட்டமிட்டபடி மௌனப் பேரணி நேற்று நடைபெற்றது.

விமானக் குண்டு வீச்சுக்கு ளான புனித யாகப்பர் தேவாலய பங்குத் தந்தை ஆர். எம். ஜி. நேசநாயகம் அவர்களின் தலைமையில் காலை 9-30 மணிக்கு புனித யாகப்பர் தேவாலயத்தில் இருந்து ஊர்வலம் புறப்பட்டது.

ஊர்வலத்தில் சகல மதத்தினரும் மத வேறுபாடின்றிக் கலந்து கொண்டனர். பாடசாலை மாணவர் உட்பட பல நூற்றுக் கணக்கான மக்கள் கலந்துகொண்ட இப்பேரணியில் விமானக் குண்டு வீச்சினால் சிதைந்த புனித யாகப்பர் தேவாலயத்தின் படம் முன் எடுத்துச் செல்லப்பட்டது. பேரணியில் பங்கு கொண்ட அனைத்துப் அருட் சகோதரர்கள், அருட் சகோதரிகள், அருட் தந்தையர் யாவரும் கறுப்புத் துணியால் வாயை மூடிக்கட்டிச் சென்றனர். சகல மக்களும் கறுப்புப்பட்டி அணிந்திருந்தனர்.

பல நூற்றுக்கணக்கான சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு அமைதியாகவும், மௌன நிலையிலும் பேரணி சென்றது.

ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பட்ட மகஜரின் பிரதி ஒன்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேச கிளைப் பிரதிநிதியிடம் கையளிக்கப்பட்டது.

பேரணி செயலகத்தைச் சென்றடைந்ததும் அங்கு பேரணியில் வரவு எதிர் கொண்ட யாழ் மேலதிக அரச அதிபர் பத்தினியம்மா திலகநாயகம் போலிடம், யாழ் மாநகர மாவட்ட குரு முதல்வர் வே. ஜே. இம்மானுவேலிடம் பேரணியில் எடுத்துச் செல்லப்பட்ட மகஜர் கையளிக்கப்பட்டது. 59-71-158-ரி

## வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி கொழும்பிலிருந்து யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மாணிக்கவாசகர் யாழ். அரச செயலகத்திற்கு அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு பாடசாலைகள் சனசமூக நிலையங்கள் கோவில்கள் போன்ற பொது இடங்களில் இடம் பெயர்ந்து தங்கியிருப்பவர்களுக்கு மூன்று நாட்களுக்கான சமைத்த உணவு வழங்க ஏற்பாடாகியுள்ளது. அத்துடன் ஒருவார காலத்திற்கான உலர் உணவுப் பொருட்களும் வழங்க ஏற்பாடாகியுள்ளது. 158-ரி

## கார் உரிமையாளர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திற்குட்பட்ட வாடகை மோட்டார் கார் வாகன உரிமையாளர்களுக்கான சந்திப்பொன்று எதிர்வரும் 07 ம திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ் புதிய மத்திய பஸ் நிலையத்தில் நடைபெறவுள்ளதால் சகல கார் உரிமையாளர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ரி)

## தமிழீழ மீட்புநிதி கடன் மீளல்

(யாழ்ப்பாணம்)

இதுவரை காலமும் தமிழீழ மீட்புநிதி கடன் மீளலுக்கு தெரிவுசெய்யப்பட்டவர்களில் கடந்த மாவீரர் வாரத்தில் தமிழீழ மீட்புநிதிக் கடனை மீளப்பெற்றுக்கொள்ளாதவர்கள் நாளை 05ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நல்லூர் மங்கையற்கரசி மகாவித்தியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம் என தமிழீழ விடுதலைப்புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது

## "மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்புவது

# ஈழத்தமிழருக்கு மரண தண்டனை விதிப்பதாக் அமைந்துவிடும்

### முன்னாள் நீதிபதி அறிக்கை

(சென்னை)

இலங்கை தமிழ் அகதிகளை மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பும் செயல், அவர்களுக்கு நாமே மரண தண்டனை விதிப்பதாக அமைந்துவிடும் என்று உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி திரு. வி.ஆர். கிருஷ்ணஐயர் தெரிவித்துள்ளார்

இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்: உயிருக்குப் பயந்து தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை அவர்களின் உயிர், உடமைகளுக்கு உத்தரவாதம் கிடைக்கும்வரை அகதிகளை அங்கு திருப்பி அனுப்பக்கூடாது என்றும் தமிழ் நாட்டில் உள்ள முகாம்களில் இலங்கைத் தமிழ் அகதிகள் படும் வேதனைகளையும் வன்மையாகக் கண்டித்து புதுடில்லியில் அறிக்கை ஒன்றை மேற்படி நீதிபதி வெளியிட்டுள்ளார். —வி-ரி

## 5000 பீப்பா எண்ணெயுடன் மாகோ யாழ். புறப்பாடுகை

(கொழும்பு)

'மாகோ' கப்பல் மொத்தம் 5050 பீப்பா எண்ணெய் வகைகளை ஏற்றிக்கொண்டு நாளை ஞாயிற்றுக்கிழமை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம்நோக்கி புறப்படவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகம், யாழ் ஆஸ்பத்திரி, யாழ். மாநகர சபை ஆகியவற்றுக்கு தேவையான டீசல், மண்ணெண்ணெயும் இதனைவிட ப. நோ கூ. சங்கங்கள்மூலம் பொதுமக்களுக்கு வழங்கவும் மண்ணெண்ணெய் இக்கப்பலில் கொண்டு வரப்படுகிறது.

ஏற்கனவே யாழ்ப்பாணத்திற்கு 4,500 பீப்பா மண்ணெண்ணெய் வாதுவ என்ற கப்பலில் கொண்டுவரப்பட்டதும் தெரிந்ததே. (வி-ரி)

## விடைத்தாள் மதிப்பீடு

(யாழ்ப்பாணம்)

யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் குறிப்பிட்டபடி இன்று 4-ம் திகதி 5-ம் ஆண்டு விடைத்தாள் மதிப்பீடுஆரம்பமாகும், அறிவுறுத்தப்பட்ட சகமதிப்பீட்டாளர்களும் தவறாது வருகை தரும்படி யா/கோட்டப் பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் கேட்டுள்ளார். (ரி)

## 'சின்ன விழிகள்' வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக்கழகமும், நிதர்சனமும் இணைந்து உருவாக்கிய 'சின்ன விழிகள்' வீடியோ குறும்படத்தின் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பி. ப. 4 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கலைபண்பாட்டுக்கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை வீடியோ படபிரதியை வெளியிட்டு வைக்க யாழ். மாவட்ட தளபதிமகான் பெற்றுக்கொள்வார். அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன் கலைஞர்களை கௌரவிப்பார் யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ. இளம்பரிதி சிறப்புரை வழங்குவார். (ரி)

## இராணுவம் தாக்கி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படகளின் தலையையும் இராணுவத்தினர் வெட்டிச்சென்றனர்.

கற்குளம் நெடுங்கேணியைச் சேர்ந்த தயாபரன் என்பவரே கொல்லப்பட்டவராவார்

## அரச அதிபர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துடன் செயலக கட்டிடங்கள் பலத்த சேதமடைந்துள்ளது. இதனால் செயலகத்தின் செயற்பாடுகள் யாவும் பின்னடைவுப்பட்டு பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் செயலகத்தில் பல பிரிவுகள் வேறு இடங்களில் இயங்கவேண்டியதொரு நிலை ஏற்பட்டுள்ளது எனவும் இப்பேச்சு வார்த்தையின்போது சுட்டிக்காட்டப்பட்டது.

இரண்டு மணி நேரம் செயலக சேதங்களை வேட்டறிந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, செயலகத்தின் தொடர்ந்த வேலைகளுக்கான பொருட்களை உடனடியாக யாழ். மாவட்டத்திற்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கும்வண்ணம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமிலட் வனசிங்காவிற்கு இத்தரவிட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது —158-ரி

## பலாலி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களில் இருவர் திருகோணமலைக்கு செல்லவுள்ளனர். விடுதலை செய்யப்பட்டு யாழ்ப்பாணம் வருபவர்களின் விபரம் வருமாறு:

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மரியநாயகம் கடைப்பர், குரோமர் ரொபேர் கெனடி, குயின்ரன் அமலதாஸ், கந்தசாமி வருணன், தோமஸ் பிலிப்ரக்ஸ், ஜேம்ஸ் குயின்ரன்ஸ், செல்வம் சகாயதாஸ், இரட்ணம் ராஜசந்திரன், பருத்தித்துறையைச் சேர்ந்த எட்வேட் எட்வின், சிவலிங்கம் வசந்தானாதன், சின்னராவேல் இஞானசுந்தரம், சுப்பிரமணியம் ராஜன், யாழ்ப்பு சூசைமுத்து, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த துரைச்சாமி இவசோதி ஆகியோரே விடுதலை செய்யப்பட்டவர்களாவர். (158 ரி)

## பொலிஸ் காவல்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமையைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கு கலகம் அடக்கும் பொலிஸாரும் ஆயுதம் தாங்கிய பொலிஸாரும் அந்தப் பகுதிக்கு விரைவாக அனுப்பப்பட்டனர்.

கலகம் விளைவித்த கோஷ்டியினர் மீது பொலிஸார் கண்ணீர்க் குண்டுகளைப் பிரயோகித்தனர்.

இந்த நிலைமையை அடுத்து கொழும்பு நகரிலுள்ள கடைகள் அனைத்தும் நேற்று நண்பகலுடன் மூடப்பட்டன.

சிங்களவர் ஒருவருக்கும் முஸ்லிம் ஒருவருக்கும் இடையில் இருந்த கடன் கொடுப்பனவில் ஏற்பட்ட தகராறின் காரணமாகவே இந்தக் கலகம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது

தேவேலையில் கடன் கொடுப்பனவில் சம்பந்தப்பட்ட சிங்களவர் கொலை செய்யப்பட்டதையடுத்து இந்தக்கலகம் ஏற்பட்டதென்றும் இப்போது சிங்களவர்களே முஸ்லிம் இனத்தவர்களிடையே அங்கு ஒரு முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. (இ-ரி)

## யாழ் கிளிநொச்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வடமத்தி மற்றும் கிழக்குப் பகுதிகளில் மணிக்கு 100 கிலோ மீற்றருக்கும் அதிகமான வேகத்தில் பலத்த காற்று வீசும்.

நாட்டின் இதர பகுதிகளில் வானம் மப்பும் மந்தாரமுமாக இருப்பதோடு காற்றுடன் கூடிய மழை அவ்வப்போது பெய்யும். வடக்கு மற்றும் வடகிழக்கு பகுதிகளுக்கு அப்பாலுள்ள கடல் பகுதி கொந்தளிப்பாக இருக்கும். —இ

## நாடாளுமன்றுக்குள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வலமோ அல்ல.

நாடாளுமன்றத்துக்குள் வருவதற்கு பொலிஸாருக்கு அவசியம் ஏற்படுமானால் என்னுடைய அனுமதியின் பேரில் நாடாளுமன்றத்துக்குப் பொறுப்பாக உள்ள பொலிஸ் உயர் அதிகாரியின் உத்தரவின் கீழ் மாத்திரமே அவர்கள் அவ்விதம் வரமுடியும்.

நாடாளுமன்றத்துக்கு வரும் எம். பிக்கள் உட்பட அனைவரையும் பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு சோதனை செய்யும் அதிகாரம் பொலிஸாருக்கு என் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

எனினும் நாடாளுமன்ற எம். பி. காலியான ஒபேசை பொலிஸாரின் கடமைகளுக்கு ஊறு விளைவித்தாக முறைப்பாடு கிடைத்துள்ளது. இப்படியான முறைப்பாடு கிடைத்திருப்பது இது முதல் தடவையல்ல எனவும் சபாநாயகர் தெரிவித்தார். (இ-ரி)

## மழையினால்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

1500, நல்லூர் உ. அ. அ. பிரிவு 1200, சாவகச்சேரி உ. அ. அ. பிரிவு 500, சண்டிலிப்பாய் உ. அ. அ. பிரிவு 2500. சங்கானை உ. அ. அ. பிரிவு 600, உடுவில் உ. அ. அ. பிரிவு 2000. தெல்லிப்பழை உ. அ. அ. பிரிவு 300 குடும்பங்கள் வெள்ள அபாயத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. —158-ரி

## தமிழகத்திலும் !

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் வேரோடு சாயும், வீடுகள் பலத்த சேதமடையும், போக்குவரத்தும், தொலைத்தொடர்புகளும் முற்றாகத் துண்டிக்கப்படுமென்று எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

சென்னை, புதுச்சேரி, தென்னாற்காடு, தஞ்சாவூர், பாண்டிச்சேரி, நாகபட்டினம், திருநெல்வேலி, கட்டப்பொம்மன், சுதம்பரநார், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களின் கடலோரப் பகுதிக்குள் கடல் நீர் உட்செல்லும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக அப்பகுதிகளிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். —வி-ரி

## அமரர் து. சீனிவாசக

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கூடி கலந்தாலோசனைகள் செய்து யாழ்ப்பாணம்அந்நியகாலச் சங்கம் என்று ஒன்றை உருவாக்கினர். இதன் தலைவராக சீனிவாசகம் திறம்படச் செயலாற்றினார். பலர் பயனடைந்தனர். அவர் இப்படிப் பல பொதுப்பணிகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். வடஇலங்கை கூட்டுறவு இயக்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட 'ஐக்கிய தீபம்' என்னும் கூட்டுறவுச் சஞ்சிகையின் ஆசிரியராகவும் சிலகாலம் பணியாற்றிய மாஸ்ரர் அதன் ஆசிரிய தலையங்கங்களையும் எழுதுவார்.

சீனிவாசகம்மாஸ்ரர் மறைந்தாலும் அவர் தமது சமூகத்துக்கும் நாட்டுக்கும் ஆற்றிய அளப்பரிய சேவை என்றும் அவரை நினைவுகூரும்.

## யாழ் செயலக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வும் தெரியவருகின்றது.

விமானக் குண்டுவீச்சினால் சேதமடைந்தயாழ் அரச அதிபர் செயலகத்தை மீண்டும் திருத்தியமைக்க ரூபா 88 லட்சம் செலவாகுமென அரச அதிபர் அரசிற்கு தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (158 ரி)

## நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் 1994ம் ஆண்டு பயிற்சி பெறுவதற்கான ஆசிரியர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 18ம் திகதி காலை 9 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறும். விண்ணப்பங்கள் சமர்ப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவுள்ளோரின் பெயர்ப்பட்டியல் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியிலும் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் பார்வைக்காக வைக்கப்படும்.

அப்பட்டியலில் தங்களது பெயர் இல்லாவிடின் தாங்கள் ஏற்கனவே விண்ணப்பித்ததற்கான சான்றுகளுடன் விண்ணப்பத்தின் பிரதி ஒன்றினை டிசம்பர் 13ந் திகதிக்குமுன்னர் சம்பந்தப்பட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் அதிபருக்கு சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். —ரி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Number B/16/ 336/B1